# தந்திட வருகின்றேன் நிறைவாய்

தந்திட வருகின்றேன்
நிறைவாய் என்னையே உனக்காக ( 2 )
இருப்பதை எல்லாம் கொடுக்கின்றேன்
கொடுத்தவர் நீர் அன்றோ - இறைவா
தந்திட வருகின்றேன்
நிறைவாய் என்னையே உனக்காக

**1)**
எனக்கென்று கொடுத்ததெல்லாம்
எடுத்துக்கொள் முழுவதும் ( 2 )
இளமையும் வளமையும் நான்
வழங்கிட வறியவர்க்கே ( 2 )
வரம் தருவாய் இறைமகனே

(தந்திட வருகின்றேன்)

**2)**
என்னையும் உன்னைப்போல
உடைத்திட வருகின்றேன் ( 2 )
உலகோர் வாழ்ந்திடவும்
உரிமைகள் அடைந்திடவும் ( 2 )
வரம் தருவாய் இறைமகனே

(தந்திட வருகின்றேன்)